செய்தி வெளியீடு எண்:557 நாள் :15.10.2013

<u>செய்தி வெளியீடு</u>

ஒரு நாட்டின் செழுமை, அந்த நாட்டினுடைய இளைஞர்களின் பண்பினாலும், அவர்கள் பெறும் வெற்றிகளினாலும் அளவிடப்படுகிறது. கல்வியில் மேன்மை, விளையாட்டுப் போட்டிகளில் திறமை ஆகிய இரண்டும் இளைஞர் சமுதாயத்திற்கு இன்றியமையாதது. இப்படிப்பட்ட அறிவார்ந்த ஆரோக்கியமான சமுதாயத்தை உருவாக்குவதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

விளையாட்டு விடுதிகள் துவக்குதல், தினப் பயிற்சி திட்டத்தின் மூலம் வீரர்களுக்கு முழுமையான பயிற்சி அளித்தல், பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதற்காக பன்னாட்டுத் தரத்தில் விளையாட்டு மைதானங்கள் அமைத்தல், விளையாட்டு வீரர்கள் பன்னாட்டு போட்டிகளில் பங்கு கொள்வதை ஊக்குவிக்கும் விதமாக ஊக்கத் தொகை வழங்குதல், உள்விளையாட்டு அரங்கங்களை அமைத்தல் போன்ற எண்ணற்ற திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் முந்தைய ஆட்சிக் காலத்தில், 1995 ஆம் ஆண்டு 7-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெற்ற போது, டென்னிஸ் போட்டிகள் நடத்துவதற்காக நவீன வசதிகளுடன் கூடிய உலகத் தரம் வாய்ந்த டென்னிஸ் விளையாட்டரங்கம், சென்னை நுங்கம்பாக்கத்தில் நிர்மாணிக்கப்பட்டது. மாநில மற்றும் தேசிய அளவிலான டென்னிஸ் போட்டிகள் இந்த அரங்கத்தில் நடத்தப்படுகின்றன.

இந்த டென்னிஸ் அரங்கம் நிர்மாணிக்கப்பட்டு 18 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், இதன் உள்கட்டமைப்புகள், ஆடுகளங்கள், மின் அமைப்புகள் போன்றவைகள், பன்னாட்டு அளவில் போட்டிகள் நடத்துவதற்கு வசதியாக மாற்றியமைக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. எனவே, இங்குள்ள செயற்கை இழை டென்னிஸ் ஆடுகளங்கள், மின்னொளி அமைப்புகள், ஸ்கோர் போர்டு ஆகியவைகளை மாற்றியமைத்தல், சீரமைப்பு பணிகளை மேற்கொள்ளுதல், தொலைக்காட்சி ஒளிபரப்பு வசதி, வீரர்கள் உடை மாற்றும் அறைகள், முக்கியப் பிரமுகர்கள் அறை போன்றவற்றை நவீன வசதிகளுடன் மாற்றியமைத்தல் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்வதற்காக 4 கோடியே 50 லட்சம் ரூபாய்க்கு நிர்வாக ஒப்புதல் மற்றும் நிதி ஒப்புதல் வழங்கி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

*******

வெளியீடு:- இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள்:- 15.10.2013.